# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 3/2018**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. பூமி | Caste: | |
| Father's Name: | நாகசாமி | Calling: | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.12.2025

( எதிரி ஆஜர். )

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது பஜார் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017ம் வருடம் கீழக்கரை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 12.05.2017ம் தேதி மாலை 4.45மணியளவில் கீழக்கரை காவல்நிலைய கு.எண். 121/2017 வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்துபோன பாண்டி, த/பெ. பெத்தான் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக கீழக்கரை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவனை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை செய்வதற்கு பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு உடலை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

எனது தினசரி பணி குறித்து நாட்குறிப்பேடு பராமரித்து வருவேன் என்றால் சரிதான். அதேபோல் எங்கள் காவல்நிலையத்தில் ஒரு பொது நாட்குறிப்பு பராமரிப்போம் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து அயல்பணிக்காக வெளியே சென்றால் கடவுச்சீட்டு வழங்குவார்கள் என்றும் அந்த கடவுச்சீட்டில் பணி குறித்த விவரம் இருக்கும் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கு சம்பந்தமாக 12.05.2017 ம் தேதி விசாரித்தார். எங்கு வைத்து விசாரித்தார் என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். விசாரிக்கும்போது கடவுச்சீட்டை ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் எந்த பணியும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 3/2018**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. கமலதாசன் | Caste: | |
| Father's Name: | அழகர் | Calling: | தலைமை காவலர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 46 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.12.2025

( எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் பஜார் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017ம் வருடம் கீழக்கரை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது 12.07.2017ம் தேதி கீழக்கரை காவல்நிலைய கு.எண். 121/2017 வழக்கில் இறந்துபோன பாண்டி, த/பெ. பெத்தான் என்பவரின் உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பகுப்பாய்வு செய்வதற்காக கீழக்கரை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளரின் உத்தரவுப்படி வேண்டுகோள் கடிதம் பெற்று இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற உத்தரவுப்படி இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இருந்த உடல் உள்ளுறுப்புகளை பெற்று இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் 14.07.2017ம் தேதி ஒப்படைத்து அதற்குரிய அத்தாட்சி பெற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:—

எனது தினசரி பணி குறித்து நாட்குறிப்பேடு பராமரித்து வருவேன் என்றால் சரிதான். அதேபோல் எங்கள் காவல்நிலையத்தில் ஒரு பொது நாட்குறிப்பு பராமரிப்போம் என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து அயல்பணிக்காக வெளியே சென்றால் கடவுச்சீட்டு வழங்குவார்கள் என்றும் அந்த கடவுச்சீட்டில் பணி குறித்த விவரம் இருக்கும் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கு சம்பந்தமாக எங்கு எப்போது விசாரித்தார் என்றால் கீழக்கரை காவல்நிலையத்தில் வைத்து 01.10.2017 ம் தேதி விசாரித்தார். நான் எந்த தேதியில் எந்த நேரத்தில் இறந்துபோன நபரின் உடல் உறுப்பு மாதிரிகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு எடுத்து சென்று ஒப்படைத்தேன் என்றால் 14.07.2017 ம் தேதி மதியம் 2.00 மணி . என் மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் எந்த பணியும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)